செ.வெ.எண்: 867 நாள்: 28.12.2019

# பாக்குடி, பேராம்பூர் மற்றும் கோங்குடிப்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு மறுவாக்குப்பதிவு.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

பாக்குடி, பேராம்பூர் மற்றும் கோங்குடிப்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு மறுவாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண் 15 க்கான உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் வே.சேகர் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னத்திற்கு பதிலாக அந்த வார்டுக்கான வாக்குச்சீட்டில் வேறுசின்னம் அச்சிடப்பட்டதால், 27.12.2019 அன்று நடைபெற்ற வாக்குப்பதிவு ரத்து செய்யப்பட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எதிர்வரும் 30.12.2019 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்த மறு வாக்குப்பதிவு விராலிமலை ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு எண் 15 ல் இடம் பெற்றுள்ள பாக்குடி, பேராம்பூர் மற்றும் கோங்குடிப்பட்டி ஆகிய

மூன்று கிராம ஊராட்சிகளில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி எண் 107(அ.வா.), 108(அ.வா.), 109(அ.வா.), 110(அ.வா.), 111(அ.வா.), 160(அ.வா.), 161(அ.வா.), 162(அ.வா.), 163(அ.வா.), 164(அ.வா.), 165(அ.வா.), 166(அ.வா.) மற்றும் 167(அ.வா.) ஆகிய 13 வாக்குச்சாவடிகளில் மட்டும் நடைபெறும்.

மறு வாக்குப்பதிவின் போது ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் மட்டுமே வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வாக்குப்பதிவுகள் நடைபெறும். 27.12.2019 அன்று இந்த வாக்குச்சாவடிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவின் போது பதிவான ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகள் மட்டும் வாக்குகள் பிரித்தெடுக்கும் அறையிலேயே தனியாக பிரித்து அவை எண்ணப்படாமல் மூடி முத்திரையிட்டு பாதுகாக்கப்படும்.

30.12.2019 அன்று நடைபெறவுள்ள மறுவாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**